மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இது பற்றி தனிக் கேள்வி போட வேண்டும். மூலக் கேள்வி ஆர்டினரி பிரிவு மருந்துகளை ஸ்பெஷலிஸ்ட் பிரிவுக்கு மாற்றப் பட்டுள்ளதா என்பது பற்றியது.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஈ. எஸ். ஐ. மருத்துவ மனைகளுக்கு தானே நேரில் சென்று பலமுறை பார்த்ததாகச் சொன்னார்கள். அவர்கள் அமைச்சராகச் சென்றார்களா அல்லது மாறு வேடத்தில் சென்றார்களா ? மாறுவேடத்தில் சென்றால் பல தவறுகள் தெரிய வரும் ; அமைச்சராகச் சென்றால் ஒன்றும் தெரியாது.

(பதில் இல்லை.)

தொழிலாளர் நல நிதி

* 542 வினா—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தொழிலாளர் நல நிதிக்கு 1974-ம் ஆண்டு முதல், வருடத்திற்கு ஒவ்வொரு தொழிலாளர்களிடமும் ஒரு ரூபாய் பிடிக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அந்நிதி எவ்வளவு சேர்ந்துள்ளது ?

(இ) என்ன நல்பணிகள் மேற்கொள்ளப்பட்டன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 1973 ஆம் ஆண்டு முதல் தொழிலாளர்களிடமிருந்து ரூபாய் ஒன்றும், தொழிலதிபர்களிடமிருந்து ரூபாய் இரண்டும் தொழிலாளர் நல நிதியின் ஆண்டு சந்தாவாக வசூலிக்கப்படுகிறது.

(ஆ) 31—12—77 நாளன்று அந்நிதியில் இருந்த தொகை எழுபத்து ஏழு லட்சம் எழுபதாயிரத்து நானூற்று எண்பத்தொன்று ரூபாய்.

(இ) பத்து இடங்களில் தொழிலாளர் நல நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. சென்னை, மதுரை மற்றும் கோவை நகரங்களில் தொழிலாளருக்கென நான்கு படிப்பகங்கள் திறக்கப் பட்டுள்ளன. சென்னை திரு. வி. க. நகரில் தொழிலாளர்களின் குடும்பப் பெண்களால் பதிவு செய்யப்பட்டு நடத்தப்படும் மகளிர் மன்றத்திற்கு மானியம் அளிக்கப்படுகிறது. தொழிலாளர்

[1978 மார்ச் 13

நல நிதி வாரியத்திற்கென பல மாடிக் கட்டிடம் ஒன்று சென்னையில் கட்டப்பட்டு வருகிறது. தாம்பரத்திலுள்ள காசநோய் மருத்துவ மனையில் 26 படுக்கைகள் கொண்ட ஒரு வார்டினை தொழிலாளர்களின் உபயோகத்திற்காக இவ்வாரியம் கட்டியுள்ளது.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, அதாவது ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனை சம்பந்தமாக தொழிலாளர்களிடமிருந்து பணம் பிடிக்கப்படுகிறது. அது, தனியார் கம்பெனிகளால் உரிய காலத்தில் ஈ.எஸ்.ஐ. தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்படாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா ? அப்படி உரிய காலத்தில் அனுப்பாமல் தாமதப்படுத்துவதன் காரணத்தால் தொழிலாளர்கள் லீவு எடுத்துச் செல்கின்ற காலங்களில் அந்தப் பணம் அவர்களுக்குக் கிடைப்பது மிக்க கடினமாக இருக்கிறதே. இதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, கேள்வி தொழிலாளர் நல நிதியைப் பொறுத்தது, அதாவது லேபர் வெல்பேர் பண்டை பொறுத்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தமது பதிலில் ரூ. 77 இலட்சம் ரூபாய்க்கு மேல் இந்த நிதியில் சேர்ந்துள்ளது என்று குறிப்பிட்டார்கள். மிகவும் நல்லது. ஆனால் கோவை போன்ற இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கும் படியான ஒரு பிரதேசத்தில் அவர்களுடைய கேளிக்கைக்காக அல்லது இதர பொழுது போக்குக்காக சிறந்த சில நடவடிக்கைகள் செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். இது வரைக்கும் செய்யாமல் இருக்கின்றதே, அது சரிதானா ? இனிமேலாவது சீக்கிரத்தில் செய்ய ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் அந்தக் குழுவில் உறுப்பினராக இருக்கிறார்கள். அவர்கள் மூலம் அந்தக் குழுவில் கூட்டம் நடக்கும்போது பரிந்துரை செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டால் அதன் மீது பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர் நல நிதிக்கு ரூ. 77 இலட்சம் சேர்ந்துள்ளது. அது இன்னின்ன நலப் பணிகளுக்காகச் செலவிடப்படுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். என்னென்ன பணிகள் செய்யவேண்டும் என்று சொல்வது அமைச்சர் அவர்கள் மட்டும்

தானு. இல்லையென்ருல் அதைச் சொல்வதற்கு ஏதாவது குழு இருக்கின்றதா? அப்படி இருந்தால் அந்தக் குழுவில் யார் யார் இடம் பெற்றிருக்கிருர்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, அதற்கென்று ஒரு குழு இருக்கிறது. அதில் யார் யார் இருக்கிருர்கள் என்ற தகவலையும் இதுவரை அந்தக் குழு என்ன செய்திருக்கிறது என்ற தகவலையும் இதில் பங்கு கொண்ட உறுப்பினர்களுக்கு நாளை மறுதினம் அனுப்பி வைக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர் நலக் கல்வி.

* 543 வினு—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொழிலாளர் நலன் பற்றி கல்வி நிலையம் அமைக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் பணிகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) இந்நிலையத்தின பணிகள் பின்வருமாறு:

(1) தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளுக்கு முறையாக பயிற்சி அளிப்பது;

(2) தொழிலாளர் தலைவர்களுக்கு தொழிலாளர் சட்டங்கள், தொழிலதிபர்—தொழிலாளர் உறவுகள் குறித்து பயிற்சி அளித்தல்;

(3) தொழிலாளர்களுக்கு தொழிளாளர் சட்டங்கள், தொழிலாளர் குறித்த பொருளாதாரவியல் கூறுகள் குறித்து அவர்கள் நன்கு அறிந்து கொள்ளும் வகையில் ஒரு வருடத்திற்கு பயிற்சி அளித்தல், மற்றும்

(4) தொழிலாளர்கள் தங்களுக்குள்ள உரிமைகளை உணர்ந்து கொள்ள தொழிலாளர் நல சட்டங்கள் விதிகள் பற்றி தொகுத்து தமிழில் வெளியிடுதல்.